**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

நாள் 21.11.2025

அசல் வழக்கு எண். 98/2014

பி.சா. 1– சேகர், த/பெ. பெருமாள்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**பிரதிவாதி 2 மற்றும் 3 தரப்பில் குறுக்கு விசாரணை**

அமுதக்கனி உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய முதல் தாரத்து மகள் ஆவார். இரண்டாவது பிரதிவாதி மற்றும் மூன்றாவது பிரதிவாதி உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு மைத்துனி உறவு முறை ஆகும். உங்கள் மனைவியின் சகோதரிகள் என்றால் சரிதான். சொத்து பிரித்துக் கொடுக்க வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் என்னுடைய அத்தை பாப்பாத்தி அம்மாள் என்பவருக்கு சொந்தமானது ஆகும். அவர் என் அப்பாவின் உடன் பிறந்த சகோதரி ஆவார். பாப்பாத்தி அம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்றால் எப்படி வந்தது என்று தெரியாது அவர்களது பெயரில் தான் உள்ளது. எனக்கு புத்தி தெரிந்த நாளிலிருந்து அவருடைய பெயரில் தான் இருக்கிறது. பாப்பாத்தி அம்மாவுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரே மகள்தான் ஆகும். பாப்பாத்தி அம்மாவின் ஒரே மகள் பெயர் என்ன என்றால் கஸ்தூரி ஆவார். கஸ்தூரி அம்மாளின் கணவர் பெயர் என்ன என்றால் சண்முகசுந்தரம் ஆகும். கஸ்தூரி அம்மாள் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஐந்து பிள்ளைகள் ஆவார்கள். அவர்களது பிள்ளைகள் பெயர் வசந்தி விஜயலட்சுமி, சசிகலா, சியாமளா என்கிற நாகராணி மற்றும் மல்லிகா என்றால் சரிதான். அந்த மல்லிகா உங்கள் மனைவி என்றால் சரிதான். மல்லிகா இறந்துவிட்டார் என்றால் சரிதான்

எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. சியாமளா என்கிற நாகராணி என்பவரும் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவரது கணவர் பெயர் தெரியுமா என்றால் நந்தகுமார். நந்தகுமார் உயிருடன் இருக்கிறாரா என்றால் தெரியாது அவர் இறந்து விட்டார் என்றால் தெரியாது. தற்போது சசிகலா, விஜயலட்சுமி, வசந்தி ஆகியோர் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மல்லிகாவுக்கும் உங்களுக்கும் பிறந்த வாரிசுகள் யார் என்றால் அமுதக்கனி, குப்புசாமி ஆவார்கள். குப்புசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். எந்த வருடம் இறந்துவிட்டார் என்றால் ஞாபகம் இல்லை. பாப்பாத்தி அம்மாள் உயிருடன் இருந்த பொழுது ஆவணம் ஏதாவது எழுதி வைத்தார்களா என்றால் வைக்கவில்லை ஞாபகம் இல்லை. அமுதக்கனி பாட்டி சம்பாதித்த சொத்தில் பாகம் கேட்கிறார் என்றால் சரிதான். பாட்டி என்றால் கஸ்தூரி சம்பாதித்த சொத்தா என்றால் பாப்பாத்தி அம்மாள் சொத்தாகும். பாப்பாத்தி அம்மாள் என்பவர் குப்புசாமி என்பவருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அது எப்பொழுது எழுதப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு யார் கார்டியனாக நியமிக்கப்பட்டார்கள் தெரியுமா என்றால் படித்துப் பார்த்தால் தான் தெரியும். கஸ்தூரி அம்மாள் கணவர் சண்முகசுந்தரம் சொத்து சம்பந்தமாக வசந்த் ஒரு வழக்கு பாகம் கேட்டு தாக்கல் செய்தார் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு சார்பு நீதிமன்றத்தில் 124/2008 என்கிற அசல் வழக்கு தாக்கல் செய்தார் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் நீங்கள் மூன்றாவது பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் பாகம் குறித்து சுவாதீனம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தினீர்கள் என்றால் சரிதான். அதில் சமாதான டிகிரி வழங்க பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வசந்தி சுவாதீனம் எடுத்துவிட்டார் என்றால் சரிதான். பாப்பாத்தி அம்மாள்

குப்புசாமி என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் அப்பொழுது குப்புசாமிக்கு என்ன வயது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதற்காக எழுதினார்கள் என்றால் பேரன் என்பதற்காக எழுதினார்கள். வசந்தி, விஜயலட்சுமி, சசிகலா ஆகியோருக்கும் குழந்தைகள் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி குழந்தைகளும் பாப்பாத்தி அம்மாளுக்கு பேரன் முறைகள் வேண்டும் என்றால் சரிதான் அப்படி இருந்தும் குப்புசாமிக்கு எழுத வேண்டிய அவசியம் என்னவென்றால் ஆம்பளை வாரிசு யாரும் கிடையாது என்பதால் எழுதப்பட்டது. மல்லிகா இறந்தவுடன் நீங்கள் மறுமணம் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான் அந்த மனைவியின் பெயர் என்ன என்றால் மீனா ஆவார். மீனாவை இரண்டாவது திருமணம் செய்து கொண்ட நீங்கள் உங்கள் முதல் மனைவிக்கு பிறந்த அமுதக்கனி மற்றும் குப்புசாமி உடன் அழைத்துச் சென்றீர்களா என்றால் அழைத்துச் சென்றேன். மீனா என்பவருக்கும் உங்களுக்கும் குழந்தைகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மீனாவுடன் நீங்களும் அமுதக்கனி குப்புசாமி அனைவரும் கூட்டுக் குடும்பமாக இருந்தீர்கள் என்றால் சரிதான். எந்தப் பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். பாப்பாத்தி அம்மாள் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் படித்து பார்த்தீர்களா என்றால் எனக்கு படிக்க தெரியாது. பத்திர எழுத்தரிடம் அதில் என்ன எழுதி இருக்கிறது என்று கேட்டீர்களா என்றால் கேட்கவில்லை. குப்புசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது எப்படி இறந்தார் என்றால் தற்கொலை செய்து கொண்டு இருந்தார். மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திக் கொண்டார். ஏன் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திக் கொண்டார் என்றால் என்னுடைய முதல் மனைவியும் அப்படித்தான் படுத்திக் கொண்டார். குப்புசாமி தன்னுடைய அக்கா அமுதக்கனியை வீட்டினுள்

சேர்க்கக்கூடாது என்று மண்ணெண்ணெய் ஊத்தி கொளுத்திக் கொண்டார். அமுதக்கனி லவ் செய்து திருமணம் செய்து கொண்டார் ஆகவே அவர் வரக்கூடாது என்று அவர் தடுத்தான். அமுத கனிக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. முதல் மனைவி மல்லிகா எப்பொழுது இறந்தார் என்றால் தெரியாது. அவர் 1988ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மல்லிகா எதற்காக இறந்தார் என்றால் தெரியாது. உங்கள் மனைவி மல்லிகாவையும் மகன் குப்புசாமியையும் நீங்கள் கொடுமைப்படுத்துவீர்கள் அதற்காகத்தான் அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்றால் சரி இல்லை. மகன் குப்புசாமி இறக்கும்பொழுது அவருக்கு 24 வயது இருக்கலாம். பாப்பாத்தி அம்மாள் குப்புசாமிக்கு சொத்து எழுதி வைக்கும் பொழுது உங்களை கார்த்தியனாக மேஜர் ஆகும் வரை நியமித்தார் என்றால் சரிதான். பாப்பாத்தி அம்மாள் சிண்டிகேட் பேங்கில் ரூபாய் 25000/- பணம் வைத்திருந்தார்கள் அதை உங்களை எடுத்துக் கொள்ள சொன்னார்கள் என்றால் சரிதான். அதை வைத்து குப்புசாமியை பராமரிக்க சொன்னார்கள் என்றால் சரிதான். அவர் உரிமை வயதை அடைந்தவுடன் சொத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுக்கவில்லை. பிள்ளை இறந்து விட்டதால் நடவடிக்கை எடுக்கவில்லை. வரி ரசீதுகளை 2013 இல் இருந்து 2017 வரை தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். வரி கட்டிய காலத்தில் குப்புசாமி உயிருடன் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. பாப்பாத்தி அம்மாள் செட்டில்மெண்ட் எழுதிய பிறகு எத்தனை ஆண்டுகள் உயிருடன் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. 19 ஆண்டுகள் உயிருடன் இருந்ததாக வாக்குமூலத்தில் சொன்னது பொய்யா என்றால் தெரியாது. குப்புசாமி உரிமை வயதை அடைந்த பிறகு சொத்தை நீங்கள் அவரிடம் ஒப்படைக்கவில்லை ஆகவே செட்டில்மெண்ட் நடைமுறைக்கு

வரவில்லை என்றால் சரியில்லை. நீங்கள் வரி கட்டிய போதிலும் பட்டாவை மாற்றினீர்களா என்றால் மாற்றவில்லை. மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுக்கவில்லை வரி மட்டும் தான் கட்டினேன். பாப்பாத்தி அம்மாள் உயிருடன் இருந்ததால் செட்டில்மெண்ட் ரத்தாகி பாப்பாத்தி அம்மாளுக்கு சொத்து சென்று விட்டது அவர் வேறு ஏதேனும் ஆவணம் எழுதினாரா என்றால் தெரியாது. வில்லங்கம் போட்டு பார்த்தீர்களா பார்த்தேன் யார் பேரில் சொத்து இருக்கிறது என்றால் தெரியாது. உங்கள் மனைவி மற்றும் மகன் குப்புசாமி தற்கொலை செய்து கொண்டதால் உங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் கொடுக்கப்பட்டது. நீங்கள் மன்னித்து விடுங்கள் தெரியாமல் அவர்களை துன்புறுத்தி விட்டேன் என்று சொன்னீர்கள் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அதன் அடிப்படையில் அவர்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. பாப்பாத்தி அம்மாள் எழுதி வைத்த சொத்தில் வாடகைதாரர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். வாடகைதாரர்களை பணம் என்னிடம் தான் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் மிரட்டினீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் மிரட்டி வாடகையை கேட்டதால் தான் வாடகைதாரர்கள் வெளியேறி விட்டார்கள் என்றால் சரியில்லை. 2010 ஆம் ஆண்டு உங்கள் மகன் இறந்துவிட்டார் 2011 முதல் 2013 வரை நீங்கள் ஏன் வரி கட்டவில்லை என்றால் தெரியாது. பாப்பாத்தி அம்மாள் 2007 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்று நீங்கள் வரி கட்டினீர்கள் என்றால் சரியில்லை. தாவா சொத்து உங்களுக்கு நான்கில் ஒரு பாகம் உரிமை என்றால் சரியில்லை. அந்த ஒரு பாகத்தில் தான் வாதி அமுத கனிக்கும் உங்களுக்கும் ஒரு பாகம் என்றால் சரியில்லை. இது நாள் வரை தாவா சொத்து பட்டா பாப்பாத்தி அம்மாள் பேரில் இருந்து வருகிறது நீங்கள்

**உண்மையை மறைத்து பொய் வழக்கு தாக்கல் செய்து விட்டீர்கள் என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram